செ.வெ. எண்: 504 நாள்: 3.8.2011

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.8.2011) தலைமைச் செயலகத்தில், 25 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட செய்தியாளர்கள் அறையை திறந்து வைத்தார்கள்.

செய்தித்துறையின் கீழ் இயங்கும் செய்தி வெளியீட்டுப் பிரிவு புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தலைமைச் செயலக பிரதான கட்டடத்தின் தரைத்தளத்தில் செயல்பட்டு வருகிறது. செய்தி வெளியீட்டுப் பிரிவு மூலம் அரசு செய்தி வெளியீடுகள், அரசு செய்தி குறிப்புகள் முதலியன தினமும் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் விழாக்கள், நிகழ்ச்சிகள், மாண்புமிகு அமைச்சர்களின் ஆய்வுக் கூட்டங்கள், செய்தியாளர் சந்திப்பு மற்றும் தலைமைச் செயலகத்திலும் சென்னையின் பிற இடங்களிலும் நடைபெறுகின்ற அரசு நிகழ்ச்சிகள் முதலியனவற்றில் கலந்து கொண்டு செய்தி சேகரிக்க ஏதுவாக செய்தியாளர்களுக்கு செய்தி வெளியீட்டுப் பிரிவிலிருந்து அழைப்பு விடுக்கப்படுகின்றது. மேற்கூறிய நிகழ்வுகளில் செய்தி சேகரிப்பதற்காக தலைமைச் செயலகத்திற்கு வருகை தரும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் காலை முதல் மாலை வரை தலைமைச் செயலகத்திற்கு வந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு செய்திகளை சேகரித்து தங்கள் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

இவ்வாறு தலைமைச் செயலகத்திற்கு வருகை தரும் செய்தியாளர்களின் பயன்பாட்டுக்கென பிரத்தியேகமாக ஒரு தனி அறை மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் ஒதுக்கித் தரப்பட்டது. தலைமைச் செயலகத்திற்கு வருகை தரும் செய்தியாளர்களின் எண்ணிக்கை நாளடைவில் அதிகரித்த காரணத்தினால் தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டடத்தின் தரைத்தளத்தில் வேறு பகுதிக்கு மாற்றப்பட்டது. அவ்வாறு மாற்றப்பட்ட செய்தியாளர் அறை கடந்த பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாமல் இருந்தது.

தலைமைச் செயலகத்திலுள்ள செய்தியாளர் அறை புனரமைக்கப்படாமல் இருந்ததை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அரசுக்கும், மக்களுக்கும் பாலமாக இருக்கும் செய்தியாளர்களுக்கான அறையை உடனடியாக புதுப்பித்து அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, 25 லட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ள செய்தியாளர் அறையில் வண்ண தள ஓடுகள் பொருத்தப்பட்ட தரை, பிளைவுட் மர வேலை செய்யப்பட்ட சுவர்கள், புதிய மேசைகள், நாற்காலிகள், அறைகலன்கள், பாதுகாப்பு அலமாரிகள், குளிர்சாதன வசதி, புதுப்பிக்கப்பட்ட கழிவறை, நவீன வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, செய்தியாளர் அறையிலிருந்தே சட்டமன்ற நடவடிக்கைகளை கேட்கும் வகையிலான ஒலிபெருக்கி அமைப்பு முதலான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இந்தப் புதுப்பிக்கப்பட்ட செய்தியாளர் அறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.8.2011) திறந்து வைத்தார்கள்.

பல ஆண்டு காலமாக புனரமைக்கப்படாமல் இருந்த செய்தியாளர் அறையை அனைத்து நவீன வசதிகளுடன் புனரமைத்துத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனம் நிறைந்த நன்றிகளைக் குழுமியிருந்த செய்தியாளர்கள் தெரிவித்துக் கொண்டனர். மேலும், புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள தலைமைச் செயலக பிரதான கட்டடத்தின் தரைத்தளத்தில் உள்ள செய்தியாளர் அறைக்கு முதலமைச்சர் ஒருவர் வருவது இதுவே முதல் முறையாகும் என்றும், இது செய்தியாளர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் மற்றும் பத்திரிகையாளர்கள் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள் : 3.8.2011